CITY OF SALISBURY

# New Resident Handbook

ஸலிஸ்பரி நகரவை உங்களை வரவேற்கிறது!

TAMIL

CITY OF
Salisbury

# அவசரகால மற்றும் நகரவை தொடர்பு விபரங்கள்

## அவசரகாலத் தொடர்புகள்

| | |
|---|---|
| **நெருக்கடி நிலை- ஆம்புலன்ஸ், காவல்துறை, தீயணைப்பு** | 000 |
| **காவல்துறை (அவசரநிலை அல்லாத போது)** | 13 14 44 |
| **நெருக்கடி கால உதவியிணைப்பு**<br>(உதவி தேவைப்படுபவர்களுக்கு தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் இலவச தொலைபேசி சேவை) | 13 16 11 |
| **உயிர்காப்பு** (Lifeline)<br>(உதவி தேவைப்படுபவர்களுக்கு தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் இலவச தொலைபேசி சேவை) | 13 11 14 |
| **அவசரகால மின் உதவி** (24 மணி நேரம்) | 13 13 66 |
| **அவசரகால எரிவாயு உதவி** (24 மணி நேரம்) | 1800 808 526 |
| **நஞ்சு தகவல் தேவை**<br>(Poisons Information Service) | 13 11 26 |
| **தண்ணீர்/கழிவுநீர்க் கால்வாய் நெருக்கடி**<br>(24 மணி நேரம்) | 1300 883 121 |
| **SA பல்மருத்துவ சேவை**<br>(அலுவலக நேரம் அல்லாத வேளைகளில் ஏற்படும் நெருக்கடி) | 8232 1034 |
| **அவுஸ்திரேலிய நேரடி உடல்நல தகவல்**<br>(Health Direct Australia)<br>(சுகவீனமுற்றிருக்கும் நிலையில் என்ன செய்வது என்று தெரியாத போது) | 1800 022 222 |

## நகரவை தொடர்பு விபரங்கள்

எங்களுடன் தொடர்பு கொள்வது உங்களுக்கு எளிதாக இருக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். எமது அலுவலக நேரங்கள் **காலை 8.30 – மாலை 5.00 திங்கள் முதல் வெள்ளி வரை**, பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக.

| | |
|---|---|
| வாடிக்கையாளர் மையம் | 8406 8222 |
| TTY (செவிமடுப்புத் திறன் பாதிப்புற்றோருக்கு) | 8406 8596 |
| அலுவலக நேரம் அல்லாத வேளைகளில் நகரவை சேவைகளுக்கு | 8406 8222 |

வலைத்தளம்: www.salisbury.sa.gov.au

மின்னஞ்சல்: city@salisbury.sa.gov.au

# ஸலிஸ்பரி நகரவை உங்களை வரவேற்கிறது!

**புதிய குடியிருப்பாளர் என்ற முறையில் உங்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்வடைகிறோம். அடிலெய்டிற்கு வடக்காக 25 கி.மீ தொலைவில் ஸலிஸ்பரி நகர் அமைந்துள்ளது. செயின்ட் வின்ஸென்ட் வளைகுடாவிலிருந்து 'பரா' மலைச்சரிவு மற்றும் மவுண்ட் லா.ஃப்ட்டி மலைத்தொடர் வரைக்கும் 161 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஸலிஸ்பரி நகர் அமைந்துள்ளது. 32 புறநகர்ப் பகுதிகளை உள்ளடக்கிய இப் பகுதியில் 130,000 மக்கள் வசிக்கின்றனர்.**

பாதுகாப்பு, மின்னகத்தொழில் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவை மட்டுமின்றி உற்பத்தித்தொழில், விநியோகம் மற்றும் சரக்குக்கிடங்குகள் போன்ற பல்வேறுபட்ட தொழில்களில் நமது ஸலிஸ்பரி நகர் பெயர் பெற்றதொரு தேசிய முன்னோடியாக விளங்குகிறது. இங்கு வசிப்பவர்களும், வருகை தருபவர்களும் சுற்றிப் பார்த்து இன்புறக் கூடிய பல பூங்காக்களும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளும், நனைநிலங்களும் இங்குள்ளன. பொழுதுபோக்கு மையங்கள், மன்றகங்கள், கடை வசதிகள், சமூக மையங்கள், நூலகங்கள், திரையரங்க வளாகம் மற்றும் பல உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் போன்ற 50-க்கும் மேற்பட்ட பொழுதுபோக்கு வசதிகள் இங்கு அமைந்துள்ளன.

மூத்த குடிமக்களுக்கான கலாச்சார நிகழ்ச்சிகள், மொழி மற்றும் எழுத்தறிவு வகுப்புகள் மற்றும் சுயவிருப்பத்தொண்டு வாய்ப்புகள் ஆகியன உள்ளடங்க பலதரப்பட்ட சேவைகளையும், நிகழ்ச்சிகளையும் இந்த நகரவை வழங்குகிறது. கூடுதலாக, அரபு, சீனம், இத்தாலியம், டச்சு, க்மேர், ஜெர்மானியம், போலிஷ், கிரேக்கம், ஸ்பானியம், இந்தி, மற்றும் வியட்நாமியம் போன்ற மொழிகளில் உள்ள ஏடுகள் ஸலிஸ்பரி நகரவையில் கிடைக்கிறது.

# சமூக மையங்கள்

**நமது சமூக மையங்கள் பரந்துபட்டவை மற்றும் உயிர்த்துடிப்புள்ளவையாகும், மேலும் ஒவ்வொரு மையமும் நகர வாசிகளுக்கென பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றன. மையத்திற்கு மையம் நிகழ்ச்சிகள் மாறுபடும், மற்றும் ஒவ்வொரு பருவமும் நிகழ்ச்சிகள் வெவ்வேறாக இருக்கும், எனினும் கீழ்வருவன எமது நிகழ்ச்சிகளில் உள்ளடங்கும்:**

- கணினி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி
- சுயவிபரச்சுருக்கம் (resume) எழுதுதல் மற்றும் வேலைதேடல் குறித்த அறிவுரை
- மொழி மற்றும் எழுத்தறிவுப் பயிற்சி
- சமையல் வகுப்புகள்
- உடலுறுதிப் பயிற்சிகள்
- கைவினை மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்
- விளையாட்டுக்குழுக்கள்
- குடும்ப ஆதரவு குழுக்கள்
- சுகாதாரத் தகவல் அமர்வுகள்

**இது குறித்து மேலும் அறிந்துகொள்ள எமது மையம் ஒன்றிற்கு வாருங்கள்.**

### சமூக மைய அமைவிடங்கள்

| சமூக மையம் | தொலைபேசி | அமைவிடம் |
|---|---|---|
| பேக்ஸ்டர் சாலை சமூக மையம் | 8250 4167 | 17 Bagster Road, Salisbury North |
| பர்ட்டன் சமூக மையம் | 8280 8843 | 386 Waterloo Corner Road, Burton |
| மொரெல்லா சமூக மையம் | 8250 7786 | 90 Kings Road, Parafield Gardens |
| பேடக்ஸ் மையம் | 8258 8099 | Cnr Bridge and Kesters Roads, Para Hills West |
| பூராகா .ஃபார்ம் சமூக மையம் | 8262 5544 | 126 Henderson Avenue, Pooraka |
| ஸலிஸ்பரி கிழக்கு அயலவர் மையம் | 8285 2055 | 28 Smith Road, Salisbury |

| | | |
|---|---|---|
| மாஸன் மையம் | 8302 5449 | 2-8 Main Street, Mawson Lakes |
| 12-25 இளைஞர் முனைவு மையம் (12-25 வயது) | 8253 9928 | 17-19 Wiltshire Street, Salisbury SA 5108 |
| ஜேக் யங்க் மையம் (50 வயதிற்கு மேற்பட்டோர்) | 8406 8525 | 1 Orange Avenue, Salisbury SA 5108 |
| பரா ஹில்ஸ் மையம் (50 வயதிற்கு மேற்பட்டோர்) | 8395 1520 | Wilkinson Road, Para Hills SA 5096 |

## நூலக சேவைகள்

பல தேசங்களைச் சேர்ந்த அனைத்து வயதினரும் சந்திக்கவும், வாசிக்கவும், பயிலவும் தகவல்களைப் பெறவும் ஸலிஸ்பரி நூலகங்கள் ஏற்ற இடங்களாகும். புத்தகங்கள், இசை, மின்னாக்க ஒளி வட்டுகள் (DVDs) பொம்மைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை இங்கு வசிக்கும் குடியிருப்பாளர்கள் கடனாகப் பெறலாம். இணையம், பிரதியெடுத்தல், ஸ்கேன் செய்தல் போன்ற வசதிகளை நீங்கள் இலவசமாகப் பெறலாம், அல்லது பள்ளி விடுமுறைகாலத் திட்டம், கதை நேரம் மற்றும் புத்தகக் குழுக்கள் போன்ற நூலகத் திட்டங்கள் ஏதாவதொன்றில் நீங்கள் பங்கு பெறலாம்.

உறுப்புரிமை இலவசம், மற்றும் இம் மாநிலத்தில் உள்ள எவ்வொரு நூலகத்திலும் எமது உறுப்பினர்களால் நூலகப் பொருட்களைக் கடனாகப் பெற இயலும். இடம் விட்டு இடம் செல்வதில் சிரமங்கள் உள்ளவர்களுக்கும், போக்குவரத்துப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் இலவச நூலக ஒப்படைப்பு சேவையினால் வழங்கப்படும் ‘வீட்டிற்கு வந்து பொருட்களை வழங்கும் சேவை’யைப் பெற இயலக்கூடும். இது குறித்து மேலும் அறிந்துகொள்ள 8406 8341 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

இலவச ‘அமைதிகாப்பு நீதவான்’ (Justice of the Peace) சேவையினையும் ஸலிஸ்பரி நூலகங்கள் வழங்குகின்றன. பலவகைப்பட்ட அதிகாரபூர்வ ஆவணங்களைப் பார்வையிட்டு சான்றொப்பமிடும் அதிகாரம் அமைதிகாப்பு நீதவானுக்கு உள்ளது. இதற்கென சந்திப்புவேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. இதற்கான நேரங்கள் மற்றும் இடங்களை அறிந்துகொள்ள 8406 8319 என்ற இலக்கத்தை அழையுங்கள்.

நூலக சேவைகளைப் பற்றி அறிந்துகொள்ள மிகச் சிறந்த மூலம் எமது வலைத்தளமாகும். நடக்கவிருக்கும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளலாம் எமது வலைத்தள அட்டவணையைப் பாவித்து உங்களுக்கும் தேவைப்படும் உருப்படியைத் தேடலாம், மற்றும் இன்னும் பல விடயங்களுக்காக எமது வலத்தளத்தை நீங்கள் பாவிக்கலாம்.

### நூலக இருப்பிடங்கள் மற்றும் திறப்பு நேரங்கள்

| கிளை | திறப்பு நேரங்கள் | தொலைபேசி | இருப்பிடம் |
|---|---|---|---|
| லேன் பீடெல் நூலகம் | திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வெள்ளி காலை 9.30 – மாலை 5.30<br>வியாழன் காலை 9.30 – மாலை 8.00<br>சனிக்கிழமை காலை 9.30 –மாலை 3.30<br>ஞாயிறு மாலை 1.30 -4.30 | 8406 8283 | 55 John Street, Salisbury |
| மாஸன் லேக்ஸ் நூலகம் | திங்கள், புதன் காலை 9.30 –மாலை 5.00<br>செவ்வாய், வியாழன் – காலை 9.30 - மாலை 7.00,<br>வெள்ளி காலை 9.30 – மாலை 5.00<br>சனிக்கிழமை காலை 10.00 –மாலை 4.00<br>ஞாயிறு மாலை 1.30 -4.30 | 8302 5555 | 2-8 Main Street, Mawson Lakes |
| பரா ஹில்ஸ் நூலகம் | திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வெள்ளி காலை 9.30 – மாலை 5.30<br>வியாழன் காலை 9.30 – மாலை 7.00<br>சனிக்கிழமை காலை 10.00 –மாலை 1.00<br>ஞாயிறு – அடைப்பு | 8264 2512 | Wilkinson Road, Para Hills |

| | | | |
|---|---|---|---|
| மேற்கு ஸலிஸ்பரி நூலகம் | திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வெள்ளி<br>காலை 9.30 – மாலை 5.30<br>வியாழன் காலை 9.30 – மாலை 8.00<br>சனிக்கிழமை காலை 9.30 –மாலை 12.30<br>ஞாயிறு – அடைப்பு | 8258 2788 | Hollywood Boulevard,<br>Salisbury Downs |
| இங்கல் ஃபார்ம் நூலகம் | திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வெள்ளி<br>காலை 9.30 – மாலை 5.30<br>வியாழன் காலை 9.30 – மாலை 8.00<br>சனிக்கிழமை காலை 9.30 –மாலை 3.30<br>ஞாயிறு மாலை 1.30 -4.30 | 8265 4717 | Beovich Road, Ingle Farm |

## விளையாட்டு வசதிகள்

**விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் ஆகியன ஸலிஸ்பரி பகுதி மக்களது அன்றாட வாழ்க்கையின் முக்கியமான அங்கங்களாகும். எமது பொழுதுபோக்கு மையங்கள் வாரம் ஏழு நாட்களும் திறந்திருக்கும், மற்றும் நீங்கள் இன்புற்று மகிழும் வகையிலும், புதிதாக ஏதாவதொன்றைக் கற்றுக்கொள்ளும் வகையிலும் வடிவமைக்கப்பட்ட பலதரப்பட்ட திட்டங்களை இந்த மையங்கள் வழங்குகின்றன.**

கூடைப்பந்து, வலைப்பந்து, பௌலிங், கால்பந்து, உள்ளரங்க கிரிக்கெட், ஸ்குவாஷ், ரேக்கட்பால், பூப்பந்தாட்டம் (badminton) சீருடற்பயிற்சி (gymnastics) தற்காப்புக் கலைகள், சறுக்குருளை (rollerskating) கிண்டிஜிம் (kindygym) மேசைப்பந்து (table tennis) கரப்பந்தாட்டம் (volleyball) நீச்சல் மற்றும் டென்னிஸ் போன்ற விளையாட்டுகள் எமது விளையாட்டுத் திட்டங்களில் உள்ளடங்கும்.

## பொழுதுபோக்கு மைய இருப்பிடங்கள்

| பொழுதுபோக்கு மையம் | தொலைபேசி | இருப்பிடம் |
|---|---|---|
| பரா∴பீல்டு கார்டன்ஸ் பொழுதுபோக்கு மையம் | 8281 4888 | Cnr Kings & Martins Road, Parafield Gardens |
| இங்கல் ∴பார்ம் பொழுதுபோக்கு மையம் | 8263 0411 | Corner Beovich Road & Roopena Street, Ingle Farm |
| ஸலிஸ்பரி பொழுதுபோக்குப் பகுதி | 8258 1713 | Waterloo Corner Road, Salisbury North |

## பூங்காக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள்

**இங்கு வசிப்பவர்களும், வருகை தருபவர்களும் சுற்றிப் பார்த்து மகிழக் கூடிய பல பூங்காக்களும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளும், நனைநிலங்களும் விளையாட்டு மைதானங்களும் ஸலிஸ்பரி நகர்ப்பகுதியில் உள்ளன. 130-க்கும் மேற்பட்ட பூங்காக்கள் மற்றும் வனப்பகுதிகளும் 50 கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட நடைவழிப் பாதைகளும் உள்ள பெருமை ஸலிஸ்பரி நகர்ப்பகுதிக்கு உண்டு.**

லிட்டில் பரா ட்ரெய்ல்ஸ், கொர்னா பூங்காவிலுள்ள வுட்லிபாரி ட்ரெய்ல் மற்றும் ட்ரை க்ரீக் லினியர் பார்க் ஆகிய இடங்கள் உள்ளடங்க பல காப்புவனப் பகுதிகளிலும், நனைநிலங்களிலும் நடை மற்றும் மிதிவண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. எமது பெரிய பூங்காக்கள் மற்றும் காப்புவனங்கள் பலவற்றில் குழந்தைகள் விளையாடுவதற்கென பாதுகாப்பான விளையாட்டுவெளிகளும், பிக்னிக் பகுதிகளும், இலவச பார்பக்யூ வசதிகளும் உள்ளன.

ஒவ்வொரு பூங்காவிலும் நாய்களின் கழிவுகளை அகற்றுவதற்கான பைகள் தரப்படும், மற்றும் பொது இடங்களில் நாய்கள் அசுத்தம் செய்தால், அதை தாம் சுத்தம் செய்தாக வேண்டும் என்பதை நாய் வைத்திருப்பவர்கள் நினைவில் கொள்ளவேண்டும். நாய்கள் அனுமதிக்கப்படும் பூங்காக்களுக்கு வெளியே பல ஒதுக்குப்புறப் பகுதிகளும் புல்வெளிகளும் உள்ளன. இப்பகுதிகளில் மாலை 6.30 மணியிலிருந்து காலை 8.00 மணி வரை நாய்களைக் அவிழ்த்து விடலாம். நாய்கள் அனுமதிக்கப்படும் பூங்காக்கள் உங்களுக்கு அண்மையில் எங்கே உள்ளன என்று தெரிந்துகொள்ள இங்கு ‘கிளிக்’ செய்யுங்கள்.

## முக்கியமான பூங்காக்கள்

| பூங்காவின் பெயர் | அமைவிடம் |
|---|---|
| ஹேறி பொவி றிசர்வ் | Riverside Drive, Salisbury Park |
| கறிஸ்ப்ருக் பார்க் | Main North Road, Salisbury Park |
| பிட்மன் பார்க் | Main entrance of Commercial Road, Salisbury |
| யுனிட்டி பார்க்<br>*சக்கரநாற்காலி பாவிக்கும் குழந்தைகள் செல்லக்கூடிய விளையாட்டுவெளி உள்ள இடம்* | South Terrace, Pooraka |
| வாட்டர்ஷெட் வெட்லண்ட்ஸ்<br>*வாட்டர்ஷெட் க.ஃபே மற்றும் .ஃபங்க்ஷன் சென்ட்டர்* | Salisbury highway, Mawson Lakes |
| செயின்ட் கில்டா ப்ளேக்ரௌன்ட் மற்றும் மாங்க்ரோவ் ட்ரெய்ல்<br>*பிராந்திய துணிகர விளையாட்டுவெளி மற்றும் இயற்கை உலா* | Mangrove Street, St Kilda |
| பேடக்ஸ் றிசர்வ் மற்றும் வெட்லண்ட்ஸ் | Corner Bridge and Maxwell Roads, Para Hills |
| கொர்னா பார்க்<br>*வரலாற்று பூர்வீகக்குடி வுட்லிபாரி நடைபாதை* | Waterloo Corner Road, Burton |

## ஸலிஸ்பரி கழிவகற்று சேவை (Waste Collection in Salisbury)

**ஸலிஸ்பரி நகரவை உங்களது குப்பைத்தொட்டிகளை இலவசமாகக் காலி செய்கிறது. அனைத்துக் குப்பைகளையும் சக்கரத் தொட்டிக்குள் போட்டு, அகற்றுவதற்காக வைக்க வேண்டும்.**

வெவ்வேறு வகையான குப்பைகளுக்கென மூன்று வகைப்பட்ட குப்பைத்தொட்டிகள் உள்ளன:

1. பிளாஸ்டிக் புட்டிகள், குவளைகள், காகிதம், கண்ணாடி ஜாடிகள், கண்ணாடிப் புட்டிகள், அட்டைப் பெட்டிகள் மற்றும் அட்டைகள் போன்ற வேண்டாத பொருட்களைப் போடுவதற்காக உள்ள மஞ்சள் மூடி போட்ட பச்சை நிற மீள்சுழற்சி குப்பைத்தொட்டி. இப் பொருட்களை மீள்சுழற்சி செய்யலாம், அதாவது இவற்றை சேகரித்து, வகைப்படுத்தி, நொறுக்கி அதிலிருந்து வேறு பொருட்களைச் செய்யலாம் என்பது இதன் அர்த்தமாகும். இந்தத் தொட்டியை நகரவையினர் இரு வாரங்களுக்கு ஒரு முறை காலி செய்வர்.

2. சிகப்பு நிற மூடி போட்ட சிறிய பச்சைக் குப்பைத்தொட்டியானது வேண்டாத சாதாரணமான வீட்டுக் குப்பைகளுக்காக உள்ளதாகும். நகரவையினர் இதை வாரம் ஒரு முறை காலி செய்வார்கள்.

3. தோட்டத்திலிருந்து நறுக்கப்படும் பசுங் கழிவுகள் மற்றும் புற்களைப் போடுவதற்காக ஒரு குப்பைத் தொட்டியை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். இது பச்சை மூடி போட்ட பெரிய பச்சை நிறத் தொட்டியாகும். இது இரு வாரங்களுக்கு ஒரு முறை காலி செய்யப்படும். அதாவது மீள்சுழற்சி குப்பைத்தொட்டி காலி செய்யப்படாத வாரத்தில் தோட்டக்கழிவு குப்பைத்தொட்டி காலி செய்யப்படும். தோட்டக்கழிவு குப்பைத்தொட்டி இலவசமாகக் காலி செய்யப்படுகிறது, ஆனால் இதைப் பதிவு செய்யவேண்டியது கட்டாயமாகும்.

### முக்கிய அறிவிப்பு

காலி செய்யப்படும் நாளன்று காலை 7.00 மணிக்கு முன்பாக உங்கள் வீட்டுக்கு முன் சாலை ஓரமாக குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். சாலையோரமாக, சாலையின் பக்கமாகத் திறக்கும் விதத்தில், ஒரு தொட்டிக்கும் இன்னொரு தொட்டிக்கும் சிறிது இடைவெளி விட்டு குப்பைத்தொட்டிகளை மூடி வைக்கவேண்டும்.

### தனிப்பட்ட வேண்டாப்பொருள் திரட்டல்: திடக் கழிவுகள் (Special Collection of Rubbish: Hard Waste)

உங்களுக்கு வேண்டாத மேசை நாற்காலிகள், வீட்டு சாதனங்கள் அல்லது மின்னணு சாதனங்கள் போன்றவற்றை நீங்கள் வீச விரும்பினால், அதற்கென இரு வழிகள் உண்டு:

1. பற்றுச்சீட்டு முறை (The Voucher System) – ‘நகரவை கழிவுப்பொருள் மாற்று இ‌ல்’(Council Waste Transfer Station)த்திற்கு இது இலவச அனுமதி அளிக்கிறது, வருடத்திற்கு ஒரு இழுவைவண்டி(trailer)யில் கொள்ளும் திட வேண்டாப்பொருட்களுக்கு அனுமதியுண்டு.

2. 10 டாலர் கட்டணத்திற்கு உங்கள் வீட்டிலிருந்து திட கழிவுப்பொருட்களை அகற்ற ஒரு மாதத்திற்கு முன்பாக நீங்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

வீட்டுக் குப்பைகள், மீள்சுழற்சி, தோட்டக் கழிவுகள் மற்றும் குப்பை அகற்றம் நேரங்கள் ஆகியவை குறித்த மேலதிகத் தகவலுக்கு Northern Adelaide Waste Management Authority (NAWMA) –யினரை 1800 111 004 எனும் இலக்கத்தில் இலவசமாக அழையுங்கள்.

## ஸலிஸ்பரி வாழ்க்கை

ஸலிஸ்பரியில் உங்களது வாழ்க்கை சந்தோஷமானதாகவும், முழுமையானதாகவும் இருக்க வேண்டும் என்றால் நீங்கள் தெரிந்துகொண்டு பின்பற்ற வேண்டிய விடயங்கள் பலவுள்ளன. எனவே, உங்கள் தேடலில் உங்களுக்கு உதவியாக இருக்க சில முக்கியமான தொடர்பு விபரங்களை அளித்திருக்கிறோம். ‘சமூக விவரத்திரட்டு’- (Community directory) – என்ற கோப்பினையும் நீங்கள் வலையிறக்கம் செய்துகொள்ளலாம்.

### பாடசாலைகள் மற்றும் குழந்தை கவனிப்பகங்கள்

பல வகைப்பட்ட மதம் சார்ந்த மற்றும் மதம் சாராத கல்வி வகைகளை வழங்கும் 44 அரசு மற்றும் தனியார் பாடசாலைகளும், 30 குழந்தை கவனிப்பு மையங்களும் ஸலிஸ்பரியில் உள்ளன. மேலதிகத் தகவலுக்கு ‘கல்வி மற்றும் குழந்தை சேவைகள்’ திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். 1800 088 158 என்ற இலக்கத்தை இலவசமாக அழையுங்கள் அல்லது www.decs.sa.gov.au என்ற வலைத்தளத்தைத் தரிசியுங்கள்.

### பொதுப் போக்குவரத்து

அடிலெய்டு மற்றும் இதர உள்ளக மையங்களுக்கு பேருந்து மற்றும் இரயில் இணைப்பு வசதிகளுடன் கூடிய பொது போக்குவரத்து வசதி ஸலிஸ்பரியில் உள்ளது. கால அட்டவணைகள் மற்றும் இதர தகவல்களைப் பெற ‘அடிலெய்ட் மெட்ரோ தகவல் இணைப்’-புடன் 8210 1000 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது www.adelaidemetro.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

### இள வயதினருக்கான திட்டங்கள்

12-லிருந்து 25 வயது வரையுள்ள இளவயதினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவுவதற்கான பல திட்டங்கள் ஸலிஸ்பரி நகரவையிடம் உள்ளன. நகரவைக்கு அப்பாற்பட்ட வெளியிடங்களிலும் இள வயதினருக்கான பல முகமைகளும் சேவைகளும் நடத்தப்படுகின்றன. மேலதிகத் தகவலுக்கு ‘ஸலிஸ்பரி சமூக தகவல் சேவை’யினரை இலக்கம் 8406 8533 –ல் அழையுங்கள்.

### வயதாகும் நிலையில் மகிழ்வாக இருத்தல் (Positive Ageing Service)

50 வயதிற்கும் மேற்பட்டவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், நடவடிக்கைகளில் பங்கு பெறவும், தாம் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளுக்கு உதவி நாடவும் உதவும் சமூக மையங்களை இச் சேவை வழங்குகிறது. இந்த மையங்கள் ‘ஜேக் யங்க் சென்ட்ட’ரிலும் (தொலைபேசி 8258 7286), ‘பரா ஹில்ஸ் சென்ட்ட’ரிலும் (தொலைபேசி 8395 1520) உள்ளன.

### உடல்நல சேவைகள்

‘லையல் மெக்எவின் மருத்துவமனை’ மற்றும் ‘மோட்பரி மருத்துவமனை ஆகிய பொது மருத்துவமனைகளும், ‘ராயல் அடிலெய்ட் மருத்துவமனை’ மற்றும் ‘ராயல் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை’ ஆகிய மருத்துவமனைகளும் அடிலெய்டில் உள்ளன. ஸலிஸ்பரி நகரின் ‘ஆரம்ப உடல்நல கவனிப்பு மையம்’ (Primary Health Care Centre) ஹாலிவுட் புலவார்ட், ஸலிஸ்பரி டௌன்ஸ் என்ற இடத்தில் அமைந்துள்ளது, மற்றும் இதன் தொலைபேசி இலக்கம் 8281 7644.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான சேவைகள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான சேவைகள் ஸலிஸ்பரியில் தாராளமாகக் கிடைக்கின்றன. குறிப்பாக, ஜான் ஸ்ட்ரீட், ஸஸ்பரி-யில் உள்ள 'Career and Workforce Development Centre' என்ற மையத்தின் மூலம் இலவச வேலை தேடல், பயிற்சி மற்றும் சுயவிருப்பத்தொண்டு சேவை ஒன்றை நகரவை வழங்குகிறது. இதன் தொலைபேசி இலக்கம் 1800 619 933.

## பிரசாவுரிமை (citizenship)

அவுஸ்திரேலியப் பிரசையாக ஆவதற்கான விண்ணப்பப் படிவத்தை நீங்கள் 'குடிவரவுத் திணைக்கள'த்திடமிருந்து பெறலாம், தொலைபேசி இலக்கம் 13 18 80. ஸலிஸ்பரி நகர பிரசாவுரிமை சடங்குகள் வருடம் நெடுக வெவ்வேறு வேளைகளில் நடத்தப்படுகின்றன. இது குறித்து மேலதிகமாகத் தெரிந்துகொள்ள நகரவையுடன் 8406 8222 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

## வழிபாட்டு ஸ்தலங்கள்

பல வகைப்பட்டட சமயத்தினர் வாழும் பரந்துபட்ட கலாசாரத் தன்மையைக் கொண்ட சமூகமான ஸலிஸ்பரியில் அனைத்து சமயத்தினருக்குமான ஸ்தலங்கள் உள்ளன. இச் சேவைகளில் எது குறித்தாவது மேலதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பினால் 'சமூக தகவல் விவரத்திரட்டு' (Community Information Directory) என்ற கோப்பினைப் பாருங்கள், அல்லது 'ஸலிஸ்பரி சமூக தகவல் சேவை'யினருடன் 8406 8533 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

## சுயவிருப்புத்தொண்டு

புதிய நண்பர்களை ஏற்படுத்திக்கொள்ளவும், உங்களது உள்ளூர் சமூகத்தினருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், மற்றும் புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு உங்களது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் சிறந்த வழி சுயவிருப்புத்தொண்டில் ஈடுபடுவதாகும். சுயவிருப்புத்தொண்டு திட்டம் ஒன்றை ஸலிஸ்பரி நகரவை ஒருங்கிணைப்பு செய்து நடத்தி வருகிறது. சமையல் வேலைகள், மற்றும் ஸலிஸ்பரி நனைநிலங்கள் ஊடாகவும், வழியிலுள்ள மற்ற இடங்களலும் வழிநடத்து சுற்றுலா மேற்கொள்ளல் போன்ற பல வாய்ப்புக்களை உள்ளூர் வாசிகளுக்கு இச் சேவையினர் ஏற்படுத்தித் தருவர். மேலதிகத் தகவலுக்கு 'சுயவிருப்புத்தொண்டு சேவை ஒருங்கிணைப்பாள'ருடன் 8406 8475 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

City of Salisbury
12 James Street
Salisbury SA 5108
T: 8406 8222
F: 8281 5466
www.salisbury.sa.gov.au